வரையறுத்த ஹோட்டல் கொழும்பு (1963) கம்பனி - 2020

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த ஹோட்டல் கொழும்பு (1963) கம்பனியின் (“கம்பனி”) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கை தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

இந்த அறிக்கையின் 1.5.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களில் என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியுள்தாக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

விடயங்களை வலியுறுத்தல்

நிதிக்கூற்றுக்களிலுள்ள குறிப்பு 2.6 ஆம் குறிப்பில் நான் கவனத்தை ஈர்க்கின்றேன். இது தொடர்ந்தியங்குவதற்கு கம்பனியின் இயலுமை குறிப்பிடத்தக்களவு ஐயத்திற்கிடமாக இருக்குமென நிச்சயமற்ற தன்மை இருப்பதை குறிக்கின்றது. இந்த விடயம் தொடர்பில் என்னுடைய அபிப்பிராயம் மாற்றப்படவில்லை.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	கம்பனியானது முறையான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் நிலையான சொத்து பற்றிய அடிப்படை தகவல்களை மாத்திரம் உள்ளடக்கி முறையான கட்டுப்பாடு இல்லாமல் நிலையான சொத்துப் பதிவேடாக எக்சல் தரவு அடிப்படை பயன்படுத்துப்பட்டுள்ளது.	GOH முகாமைத்துவம் ஏற்கனவே நிலையான சொத்தின் முறையான இனங்காணல் மற்றும் GOH கொண்டிருந்த மதிப்பீட்டை செய்வதற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட வெளிவாரி தரப்பினர் செயற்பாட்டில் உள்ளனர். ஒதுக்கப்பட்ட வேலை இறுதியாக்கபபட்டவுடன் முறையான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டும்.	சகல அவசியமான தகவல்களுடன் நிலையான சொத்துப் பதிவேடு பேணுவதற்கு பரிந்துரைக்க்பட்டுள்ளது.
(ii)	கம்பனியானது மெதுவாக நகரும் விடயங்களை கைமுறையாக இனங்காணப் பட்டிருந்ததுடன் பொருள் வழங்கப்படும் நேரத்தில் மெதுவாக நகரும் விடயங்களை இனங்காண்பதற்கு முறைமை எவ்வித சந்தர்ப்பத்தையும் கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	IDS முறைமையை நாளது வரையாக்கி மெருகூட்டப்படும்.	மெதுவாக நகரும் பொருளிருப்புக்களை இனங்காண்பதற்கு இயலக் கூடிய வழியில் பொருளிருப்பு மாதிரிகளை வகைப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
(iii)	பொருளிருப்பு பதிவுகளை வைத்திருந்தல் கைமுறை முறைமை காரணமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன: - பொருள் இருப்புக்களின் வினைத்திறனான மற்றும் திறம்பட முகாமை செய்வதற்காக தகல்கள் கிடைப்பனவு போதமை. - பொருள் இருப்பபுகளின் கைமுறையிலான பதிவேடுகளை பேணுவதற்கு உயர்ந்த கிரயம், முயற்சி மற்றும் வளங்கள் ஏற்படல், - கைமுறை பதிவுகள் மூலம் உருவாக்கப்படும் தகவல்களின் நம்பக தன்மை குறைவு. - நிதிப் பதிவேடுகளிலுள்ள முறையீனங்கள், முரண்கள் மற்றும் தவறாக கையாளலின் ஆபத்து அதிகரித்தல். - பொருளிருப்பு பதிவின் காலப் பகுப்பாய்வு அறிக்கை இன்மையால் பழைய மற்றும் பழுதடைந்த	நாங்கள் இதன்படி முறைமைகளை மேம்படுத்தவதுடன் நாங்கள் ஏற்கனவே முறையான முறைமை மாற்றத்தை வேண்டியிருந்தோம். ஏனெனில் தற்போதைய முறைமை பயன்பாட்டாளர் நட்பாக இருக்கவில்லை.	கம்பனியானது சரியான நேர கண்காணிப்பை எளிதாக்கும் தானியங்கி அறிக்கைகளை உருவாக்கும் (பொருளிருப்பு, காலப் பகுப்பாய்வு) மற்றும் நுழைவு கட்டுப்பாடு மேம்படுத்தல் கணக்கீட்டு மற்றும் செயற்பாட்டு முறைமைகளுடன் ஒன்றிணைந்து கணனி மயப்படுத்தப்பட்ட பொருளிருப்பு முகாமைத்துவ முறைமைக்கு மாறுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

	பொருளிருப்பிற்கான ஏற்பாடுகள் மதிப்பிடவும் பாரமரிக்கவும் இயலாமை		
(iv)	விற்பனை விலைப்பட்டியல் பதிவிடல், பற்றுசீட்டிடல் மற்றும் பிரணோகிக்கின்ற கடக்பட்டோர் கொடுப்பனவுகள் போன்ற கொடுக்கல் வாங்கல்களின் இணக்கம், உண்மைத் தன்மை மற்றும் சரியான பதிவினை பதிதல் என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்குச் செயற்படுத்தப்படுகினற. கொடுக்கல் வாங்கல்களை நோக்கிய வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் மீதான கட்டுப்பாடுகளின்மை அவதானிக்கப்படட்டது.	கவனத்திற்கொள்ளப்பட்டது, நாங்கள் நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற மீதிகளை இனங்காண்பதற்கு முயையான முறைமையை அமுலாக்கவதுடன் உரிய அனுமதி பெறப்படின் உரிய சீராக்கல்களைச் செய்வோம	விற்பழன விலைப் பட்டியல்களை சரியான நேரத்தில் மற்றும் உண்மையாக பதிவு செய்தல், கொடுப்பனவுகளை முறையாக பதிதல் மற்றும் நிலுவையாக இருக்கின்ற மீதிகளிற்கு எதிராக அறவீட்டு முறைமையை பிரயோகித்தல் ஆகியன தரமுயர்துவதற்கு நடைமுறைகளை உள்ளடக்கிய பெற வேண்டியவைகள் மீது அதன் உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கு கம்பனிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
(v)	கம்பனியானது இலங்கை வழங்கி – மெற்றோபொலசன் மற்றும் இணைந்த கிளைக் கணக்குகளிற்காக அனுமதிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றுக்ளை வழங்கியிருக்கவில்லை. அந்த கணக்குகளிற்கான வங்கி கணக்கிகணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காமை, முறையான இணக்க நடைமுறைகள் இன்மையை குறிக்கின்றது.	கவனத்திற்கொள்ளப்பட்டது, நாங்கள் வங்கி கணக்கிணக்கக் கூற்றினை தயாரித்தலை செயற்படுத்தவதுடன் உரிய அனுமதிகளையும் பெறுவோம்.	சகல வங்கிக் கணக்குகளையும் வங்கி இணக்கங்களை தயாரித்து மீளாய்வு செய்கின்ற நடைமுறை மற்றும் சுதந்திரமான மற்றும் பொறுப்படைய உத்தியோகத்தாரால் மாதாந்த அடிப்படை, மீளாய்வு செய்யப்பட்ட மற்றும் முறையாக அனுமதிக்கப்பட்டவற்றில் அத்தகைய இணக்கக் கூற்றுக்களை தயாரித்தல் என்பவற்றினை உருவாக்கி ஒழுங்காக பின்பற்றுவதற்கு கம்பனிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	அறிக்கையிடல் திகதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்காக தள்ளுபடி மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டிருக்காததுடன் இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 36 –சொத்துக்களின் தள்ளுபடியில் வேண்டப்பட்டவாறு முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட பிரதான எதிர்வுகூறல்கள் மற்றும் தள்ளுபடி மதிப்பீட்டு விளைவுகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.	உடன்பட்டனர். நாங்கள் ஆண்டு தோறும் விரிவான ஆவணங்களை நாங்கள் பேணுகின்றோம். சொத்துக்களின் பெறுமதி நியாயமாக குறிப்பிடப்பட்டு LKAS 36 இன் கீழ் வேண்டப்பட்டவாறு நிதிக் கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் செய்யப்படும்.	வருடாந்த அடிப்படையில் விரிவான ஆவணங்களுடன் தள்ளுபடி மதிப்பீட்டை கையேற்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் முற்கொண்டுவரகின்ற சொத்துக்களின் பெறுமதி நியாமாக குறிப்பிடப்ப ட்டுள்ளதென உறுதிப் படுத்துவதற்கும் LKAS 36 இன் கீழ் நிதிக்கூற்றுக்களில் உரிய வேளிப்படுத்தல்கள் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
(ii)	இலங்கை கணக்கீட்டு நியம இல 16 (LKAS) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பிரகாரம் குறைந்தது 3 முதல் 5 ஆண்டுகள் வரை கம்பனிகளுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு செய்வதற்கு வேண்டப்பட்டுள்ள போதிலும் 7 ஆண்டுகளாக அவர்களுடைய ஆதனம், பொறி மற்றும உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்ப்பபட்டது.	மதிப்பீட பூர்த்தியாகியிருப்பின் நாங்கள் அறிக்கை அடிப்படையில் நிதிக்கூற்று நாளதுவரையாக்கப்படும்.	கம்பனியானது உரிய கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட வேண்டுகையுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்து செல்லும் தன்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மை குறித்து குறிப்பிடத்தக்களவு ஐயம் எழுந்துள்ளது. எவ்வாறாயினும் வழமையான வியாபாரத்தை தொடருவதற்கு நோக்கமாக அல்லது அவசியம் இல்லாமல் கலைத்தல், வியாபாரத்தை தடுத்தல் அல்லது பிரமாணங்களின் பிரகாரம் கடன் வழங்குநருக்கு பாதுகாப்பை வேண்டுதல் போன்ற நோக்கமாக கொண்டிருக்கவில்லை. பின்வரும் குறிகாட்டிகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் எதிர்வு கூறல் தொடர்பில் குறிப்பிடத்தக்களவு ஐயம் உள்ளது. • தேறிய பொறுப்பு அல்லது நடைமுறை பொறுப்பு நிலைமை.	அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் நாங்கள் இந்த காரணிகளை நிராகரித்து கோட்டலை திரும்பவும் தொடர்சசியான கம்பனியாக செயற்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கின்றோம்.	கம்பனி தொடர்ச்சியான தன்மையாக தொடருவதற்கு முகாமைத்துவம் அவசரமாக மீளாய்வு செய்யப்படடு ஆபத்துக்களை குறைப்பதற்கும் பங்குதாரர்களின் நம்பிக்கையை பெறுவதற்கும் ஆரம்பத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. .

- நிலையான நீண்ட காலக் புதுப்பிக்ககூடிய நெகிழ்ச்சியில்லாமல் முதிர்ச்சி அடிப்படையில நிலையான நீண்ட கடன்பெறல் அல்லது திருப்பிச் செலுத்துதல் அல்லது சொத்துக்களிற்கு குறுகிய கால கடன்பெறல் மீதான அதிகப்படியான தங்கியிருத்தல்.
- கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்கொடுத்தோரால் நிதி உதவிகளின் மீளபெறல்களின் குறிப்புரைகள்
- வரலாற்று அல்லது அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட எதிர்மறையாக செயற்படுகின்ற காசுபபாய்ச்சல்
- பாதகமான பிரதான நிதி வீதங்கள்
- உரிய திகதிகளில் கடன்கொடுத்தோருக்கு செலுத்த இயலாமை.
- கடன் உடன்படிக்கை நிபந்தனைகளுடன் இணக்குவதற்கு இயலாமை
- வழங்குநர்களுடன் காசு அடிப்படை வழங்கல் கொடுக்கல் வர்கல்களிற்கு கடனலிருந்து மாற்றம்

1.5.4 கணக்காய்விற்காக கிடைக்கப்பபெறாத ஆவணச் சான்றுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு கையிலுள்ள காசின் ரூபா 4,032,190 ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் கம்பனியானது அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு கையிலுள்ள காசு போட்டி, உள்ளதன்மை, உண்மைத் தன்மை என்பவற்றினை மெய்மையாய்வு செய்வதற்கு முறையான கணக்காய்வு சான்றுகள் அல்லது விளக்கங்கள் வழங்குவதற்கு இயலாதிருந்தது. எதிர்பாராத பண எண்ணலின் போது ரூபா 3,064,590 பௌதீக காசு மீதிக்கும் ரூபா 4,012,145 உள்ளபடியான காசு மீதிக்கும் அறிக்கையிடல் திகதிக்கு பின்னரான காசு மெய்மையாய்வு திகதிக்கு பின்னர்	கவனிக்கப்பட்டது. நாங்கள் வித்தியாசத்தை இணக்கம் செய்வதுடன் வித்தியாசங்களை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்போம்.	வித்தியாசங்களை இனங் காண்பதற்கும் அதன் மூல காரணத்தை விசாரணை செய்யவும் சரியான நடவடிக்கை எடுபபதற்கும் விசாரணைகள் நடாத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது மேலும் கம்பனியானது காசு கையாளல் மீது உள்ளக கட்டுப்பாட்டை செயற்படுத்துவதை உறுதி செய்யப்பட வேண்டியதுடன் காசு கையாளர் மற்றும் அறிக்கையில் தொடர்பான உத்தியோகத்தரின் கடமைகளை பிரித்தல், காசு கையாளல் தொடர்பான முறைகேடுகள் மற்றும் தவறுகளைக் குறைக்கப்பட வேண்டும்.

உள்ளவாறான ரூபா 7,076,734.69 முறைமை அறிக்கையிடப்பட்ட மீதிக்கும் இடையில் இனங் காணப்பட்டிருந்தது. இந்த வித்தியாசம், மெய்மையாய்வு நேரத்தில் திருப்தகரமான சான்றுகள், அதன் விளைவு நிர்ணயிப்பதற்கு மேலும் விசாரணை செய்வதற்கு வேண்டுகை, காசு கையாளல் நடைமுறையில் உண்மை தன்மையை உறுதிப்படுத்தல் என்பவற்றினை விளக்கப்பட்டிருந்தது.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i) அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய VAT தொகையில் அதன் உள்ள தன்மைக்கான திருப்திகரமான ஆவணங்களை வைத்திருக்காமல் ரூபா 14,302,454 தொகை செலுத்தப்படுகின்றன என அவதானிக்கப்பட்டது.	நாங்கள் ஏற்கனவே IRD இற்கு உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் நமைமுறையில் உள்ளோம்.	அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு அந்த தொகையின் அறவீட்டு தன்மையை மதிப்பிடுவதற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் (IRD) விபரங்களை பெறுவதற்கு அல்லது வினாக்களை எழுப்புவதற்கு பரிந்துரைத்துள்ளது.

1.7 வெளிப்படுத்தப்பட்டிருக்காத தொடர்புபட்ட தரப்பினம் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i) தொடர்புபட்ட தரப்பினர் மீதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதாந்த அடிப்படையில் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.	கவனத்திற் கொள்ளப்பட்டது. நாங்கள் மாதாந்த கொடுக்கல் வாங்களை இணக்கம் செய்வதற்கு முறைமையை அமுலாக்குவதுடன் அதே மாதத்தில் உரிய சீராக்கல்களையும் செய்வோம்.	தொடர்புபட்ட தரப்பினர் மீதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதாந்த அடிப்படையில் இணக்கம் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது .

1.8 காசு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i) பிரதான வங்கி கணக்குகளை பயன்படுத்துவதற்கு பதிலாக	கவனத்திற் கொள்ளப்பட்டது. கம்பனியிலுள்ள தற்போதைய நிதி	பிரதான கொடுக்கல் வாங்கல்களிற்காக சிறு

	கம்பனியானது அதன் பிரதான செயற்பாடுகளின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பொடுப்பனவுகளிற்கு சிறு காசு கட்டுநிதியை பயன்படுத்துகின்றது என அவதானிக்கப்பட்டது.	நிலைமைகளுடன் நாங்கள் நாளாந்த செயற்பாடுகளை தொடருவதற்கு பாரிய பிரச்சினைகளிற்கு முகம் கொடுக்கின்றோம். நாங்கள் வங்கிக்கு காசினை வைப்பு செய்யப்பட்டிருப்பின் நாங்கள் நாளுக்கு நாள் வியாபாரத்தை செயறபடுத்துவதற்கு காசு விற்பனைகளை பயன்படுத்துகின்றோம். கொடுப்பனவுகளை	காசு கட்டுநிதியை பயன்படுத்துவதை தசெய்வதற்கும் கம்பனியினுடைய உத்தியோகபூர்வ வங்கி கணக்குகள் ஊடாக சகல குறிப்பிடத்தக்க கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகளை செயற்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கும் கம்பனிக்கு கடுமையாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
(ii)	2020 சனவரி 01 முதல் 2020 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது நிகழ்ந்திருந்த ரூபா 1,514,471 தொகையான பின்வரும் பல்வேறு வெளிநாட்டு நாணய பெறுவனவு 78 பற்றுச்சீட்டுக்கள் அடுத்துவரும் வேலை நாட்களில் கம்பனியினுடைய வங்கி நடைமுறை கணக்கில் வைப்புச் செய்யப் பட்டிருக்கவில்லை. அந்த பெறுவனவுகள் பெறப்பட்ட திகதியிலிருந்து கருத்திற் கொள்ளகூடிய கால இடைவெளியின் பின்னர் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. ஆதலால் காசு முகாமைத்துவத்தின் மீதான உள்ளக கட்டுப்பாடு நலிவான மட்டத்தல் இருப்பதைக் குறிக்கின்றது.	கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் மேற்கூறிய பாரதூரமான குறைபாடு இடம்பெற்றது என ஏற்றுக்கொள்கின்றோம். நாங்கள் தற்போது அத்தகைய நிகழ்வுகள் மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்கு சகல பரிசோதனைகள் மற்றும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளோம்.	கபம்பனியானது பெறுவனவகள்ன் கையாளல் மற்றும் வைப்புக்கள் மீது அதன் உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சகல பெறுவனவுகளும் தாமதமில்லாமல் அடுத்துவரும் வேலை நாட்களில் ஒதுக்கப்பட்ட வ்கி கணக்கில் வைப்புச் செய்யப்பட வேண்டும். சிறந்த காசு முகாமைத்துவ நடைமுறைகளிற்கு ஏற்ப காசு கையாளல் மற்றும் வைப்பச் செய்தல், வைப்புக் காலம், கணக்களிப்பு பொறுப்பு மற்றும் இணங்குவதை உறுதிப்படுத்துதல் மற்றும் காலாரீதியான மீளாய்வு நடாத்துதல் என்பன மீது முறையான கொள்கை தாபித்து அமுலாக்கப்பட வேண்டும்.

(iii)	2019 இல் பின்வரும் வெளிநாட்டு நாணய பெறுவனவுகள் தற்போது வரை கம்பனியினுடைய நடைமுறை வங்கி கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	கருத்துரைகள் வழங்கப்படவில்லை.	முகாமத்தவம் தாமதத்திற்கான காரணங்களை நிர்ணயிக்கவும் சரியான நடவடிக்கை எடுக்கவும் 2019 இலிருந்து வைப்புச் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணய பெறுவனவுகள் நிலையை உடனடியாக விசாரணை செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் கம்பனி சகல பெறுவனவுகளினதும் கையாளல் மற்றும் உரிய கால வைப்புக்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை அமுலாக்கப்பட வேண்டும்.

பற்றுச்சீட்டு திகதி	**தொகை**
2019.05.21	USD 160
2019.09.06	USD 177
2019.09.07	USD 100
2019.10.26	USD 100

1.9 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

	சட்டங்கள, விதிகள் பிரமாணங்களிற்கான தொடர்பு	**இணங்காமை**	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரைகள்**
(i)	2003 இன் 7 ஆமம் இலக்க பொறுமதி சேர்வரி (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 25B ஆம் பிரிவு	பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட நிறுவனமும் வரிவிதிக்கக்கூடிய காலப்பகுதி ஒரு மாதமாக இருக்க வேண்டியதுடன் குறிப்பிட்டவற்றின் அறிக்கைகள் வரிவிதிக்கக்கூடிய காலப்பகுதி காலாவதியான பின்னர் மாத்தின் கடைசி நாள் அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு காலப்பகுதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் பின்வரும் சந்தர்ப்பங்களில் கம்பனி I குறிப்பிடப்பட்ட காலப்பகுதிகளில் VAT அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். 2410 அறிக்கை ஏற்கனவே சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் மிகுதி இரண்டு அறிக்கைகளும் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படும்.	உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களை பின்பற்றப்பட வேண்டும்.

வரி காலப் பகுதி	நிலுவை திகதி	அறிக்கை சமர்ப்பித்த திகதி
2010	2020.04.30	2021.07.15
2020	2020.07.31	2021.07.15
2030	2020.10.31	2021.07.15
2040	2021.01.31	2021.07.15

(ii) 2019 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு கம்பனிக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம் ரூபா 40,187,169 செலுத்த வேணடிய VAT ஆக காட்டுகின்றது. விபரங்கள் கீழே தர்பபடுகின்றன.

வரி காலப் பகுதி	**IRD பிகாரம் மதிப்பிடப் பட்ட வரி (ரூபா)**	**தண்டப் பணம் (ரூபா)**	**மொத்த வரிப் பொறுப்பு (ரூபா)**	**வரி சேகரிப்பு (ரூபா)**	**மொத்த செலுத்த வேண்டியவை (ரூபா)**	அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம் நாங்கள் இதனை தீர்ப்பதற்கு IRD உடன் இதார்பில் இருக்கின்றோம்.	உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு முந்திய நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
VAT							
1640	11,970,537	2,339,394	14,309,931	10,226,197	4,083,734		
1710	9,462,603	995,745	10,458,347	9,186,509	1,271,839		
1720	6,493,721	2,136,470	8,630,191	4,528,128	4,102,064		
1740	11,275,742	2,972,787	14,248,529	8,723,034	5,525,495		
1810	13,628,939	4,531,131	18,160,070	9,817,808	8,342,262		
1830	11,611,297	1,908,692	13,519,989	10,158,312	3,361,677		
1840	13,147,112	2,640,540	15,787,652	10,506,572	5,281,080		
1910	13,048,233	2,712,432	15,760,665	10,416,565	5,344,100		
1920	4,341,833	1,144,247	5,486,081	3,441,762	2,044,318		
1930	3,938,284	536,541	4,474,825	3,644,224	830,601		
மொத்தம்	**98,918,302**	**42,972,518**	**120,836,280**	**80,649,111**	**40,187,169**		

1.7 பொதுவான IT கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரைகள்**
(i)	IDS முறைமையின் பயனாளர் உருவாக்கலிற்காக முறையான பயனாளர் வழிகாட்டல் எதுவும் இருக்காததுடன் பயனாளர் உருவாக்கல் உழியர்களிடமிருநது வாய்மொழி வேண்டுகையில் உருவாக்கப்பட்டிருந்தது.	நாங்கள் IDS முறைமையில் பயனாளர் உருவாக்கலிற்காக முறையான பயனாளர் வழிகாட்டல் இன்மை தொடர்பான அவதானிப்புகளை ஏற்று கொள்வதுடன் வாய்மொழி ஊழியர் வேண்டுகையில் நம்பிக்கை கொள்கின்றோம். நாங்கள் இந்த கண்டுபிடிப்பை ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தில் இதுபோல நிகழ்வுகளை தடுப்பதற்கு தெளிவான ஆவணப்படுத்தப்பட்ட வழிகாட்டலுடன் பயனாளர் உருவாக்க நடைமுறையை செயற்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.	கம்பனியானது பயனாளர் கணக்கு உருவாக்கல், மெருகூட்டல் மற்றும் செயலிழப்பு என்பவற்றிற்காக ஆவணப்படுத்தப்பட்ட மற்றும் அனுமதி நடைமுறையை உள்ளடக்க வேண்டிய முறையான பயனாளர் முகாமைத்தவ கொள்கையொன்று அமுலாக்கப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
(ii)	IT பிரிவு விற்பனையாளரால் புதிதாக சேரிக்கப்பட்ட பெயரை பல்வேறு மாற்றங்கள்	நாங்கள் அவதானிப்புகளுடன் உடன்படுகின்றதுடன் விரிவான மாற்ற லொக் அமுலாக்கப்பட்டு	செய்யப்பட்ட IT பிரிவு விற்பனையாளர் அல்லது உள்ளக IT

	உள்ளடங்கலாக (மாற்ற லொக்) பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை	தொடர்ந்து முன்னேறுவதை உறுதிப்படுத்துவோம்.	உத்தியோகத்தரால் செய்யப்பட்ட சகல முறைமை மாற்றங்களையும் பதிவதற்கு விரிவான மாற்ற லொக் தாபிக்கப்பட்டு பேணப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
(iii)	முறையான முறைமை தகவலில் தரவு பதிவு பரிந்துரை மற்றும் இன்னொரு உயர் உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட தேவை அனுமதிக்கும் இடையில் பிரித்தல் வேண்டப்பட்டது. எவ்வாறாயினும் அத்தகைய படி நிலைகள் முறைமையில் இருக்காததுடன் பயனாளர் கணக்குகளுடன் தொடர்புடைய ‘‘பயனாளர் அதிகார நிலைகளை’’ அடையாளம் காணும் வசதிகளை முறைமை வழங்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	• உடன்படுகின்றோம் நாங்கள் முறையான முறைமை தகவலில் தரவு பதிவு பரிந்துரை மற்றும் தரவு பதிவு பரிந்துரைக் மற்றும் அனுமதிக்கான கடமைகளை பிரித்தல் தற்போது இருக்கவில்லை. பயனாளர் அதிகார மட்டங்களை இனங் காண்பதற்கு வழங்கப் பட்டிருக்கவில்லை. நாங்கள் முறையான அங்கீகார நடைமுறைகளுடன் முறைமையன் இணக்கத்தை மேம்படுத்த இந்த பிரச்சனைகளை வெளிப்படுத்துவோம்.	தெளிவாக நிர்ணயிக்கப்பட்ட பயனாளர் பணிகள் மற்றும் அதிகார மட்டங்களிற்கு உதவியளிப்பதற்கு தரமுயர்த்தப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
(iv)	குறித்த காலப் பகுதியிலிருந்து செயற்பாடற்ற கணக்கை முறைமையிலிருந்து செயலிழந்த பயனாளர் கணக்கை தானாக இயக்குவதற்கு முறையான பொறிமுறைக் கட்டுப்பாடு இருக்கவில்லை. ஆகவே, முறைமை மீதான நுழைவுத் தன்மை கட்டுப்பாடு உயர்த்தப்பட்டிருந்தது.	உடன்படுகின்றோம். முறைமை குறித்த காலப்பகுதியின் பின்னர் காலாவதியான பாஸ்வேட் தானாக இயக்குவதற்கு வடிவமைக்கப் பட்டுள்ளது. எவ்வாறாயினும், முன்னாள் IT பிரிவு எதிர்கால பயனாளர் கணக்கிற்காக இதனை அமுலாக்கியிருக்கவில்லை.	கம்பனியானது நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்கு பின்னால் செயற்பாடற்று இருந்த பயனாளர் கணக்குகள் செயற்படுத்த மற்றும் செயலிழக்க செய்வதற்கு முறைமைக்குள் தானியங்கி பொறிமுறை அமுலாக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
(v)	உள்நுழைதல் வாரியாக பயனாளர்களிற்காக தனிப்பட்ட கணக்குகள் உருவாக்குவதந்கு பதிலாக (ரப் பார் காசாளர், ரேபைன் காசாளர், காபர் அறை காசாளர், புதிய முன்பகக உத்தியோகத்தர் பயனாளர்) ஒரு பயனாளர் கணக்கு மொத்த வியாபார பிரிவுகளிற்காக உருவாக்கப்பட்டிருந்தது. எனவே, ஒன்றுக்கு மேற்பட்ட பயனாளர்கள் ஒரே பயனாளர் கணக்கை பயன்படுத்தி முறைமையில் உள்நுழைவதால் அதிக ஆபத்துளளதாக கண்டறியப்பட்டதுடன் தரவு உள்ளீடு மற்றும் முறைமை மாற்றத்திற்கான ஆபத்தை அதிகரித்துள்ளது.	உடன்படுகின்றோம். நாங்கள் முறைமை தரவை நுழைவதற்கும் மாற்றுவதற்கும் தனிப்பட்ட நபர்களிடையே ஒரே பயனாளர் கணக்கை பயன்படுத்தவது தொடர்பில் குறித்த ஆபத்தை ஏற்றுக்கொள்கின்றோம். இந்த பிரச்சனைகளை நாங்கள் தீர்பனவு செய்யப்படடு தற்போது ஒவ்வொரு ஊழியர்களிற்காகவும் தனிப்பட்ட பயனாளர் கணக்கினை செயற்படுத்தியுள்ளோம். இது முறைக்கான பாதுகாப்பு மற்றும் குறிப்பிட்ட நுழைவை உறுதி செய்கின்றது.	அவர்கள் பொறுப்புக்களின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட வேலை அடிப்படை உரிமையுடன் ஒவ்வொரு முறைமை பயனாளருக்கும் தனிப்பட்ட பயனாளர் கணக்குகள் உருவாக்கப்பட வேண்டுமென கடுமையாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 87.1 மில்லியன் நட்டமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 45.2 மில்லியனாகும். ஆகவே, நிதிசார் விளைவுகளில் ரூபா 41.9 மில்லியன் தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. வருமான மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானங்களில் முறையே 52 சதவீதம் மற்றும் 68 சதவீதத்தால் வீழ்ச்சி ஆகியன மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக உள்ளது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்கின் பகுப்பாய்வு

அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி சதவீதங்களுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு பின்வருமாறு உள்ளன.

விபரம்	முரண் தொகை அதிகரிப்பு / (வீழ்ச்சி) (ரூபா)	முரண் %	முரணிற்கான காரணம்
உணவகத்திலிருந்தான வருமானம்	(54,022,640)	-43%	நாட்டில் நிலவிய கோவிட் 19 நோய் தொற்று காரணமாக வியாபார பகுதி மற்றும் வருமானம் வீழ்ச்சியடைந்தது.
அப்பாட்மென்டிலிருந்தான வருமானம்	(55,061,732)	-66%	
மதுபாணத்திலிருந்தான வருமானம்	(11,153,005)	-50%	
ஏனைய செயற்பாட்டு வருமானம்	(5,074,208)	-68%	
நிர்வாகச் செலவினம்	(37,883,903)	-19%	
விநியோகச் செலவினம்	(12,156,371)	-77%	

2.3 விகிதப் பகுப்பாய்வ

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான கம்பனியின் சில முக்கியமான வீதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

இலாபத்தன்மை வீதம் (சதவீதம்)	**2020**	**2019**
மொத்த இலாப வீதம்	51	62
மொத்த சொத்துக்கள் மீதான வருவாய்	(21)	(12)
உரிமை மூலதனம் மீதான வருவாய்	(696)	(46)
திரவ விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை)	**2020**	**2019**
நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை)	1.03	1.19
விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை)	0.96	1.15

கம்பனியின் சகல வீதங்களும் மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய நட்டம் தொடர்ச்சியாக அதிகரித்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வீழ்ச்சியடைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
இலங்கை வங்கிக்கும் கம்பனிக்கும் இடையில் கைச்சாத்திட்ட குத்தகை உடன்படிக்கை பிரகாரம் கம்பனியானது அவற்றின் பயனாளர்களிற்காக மின்சார, வடிகாலமைப்பு மற்றும் நீர் சேவைக் செலவினை ஏற்கவேண்டியிருக்ககும். முகாமைத்துவம் புறம்பான மின்சார மீட்டரை பொருத்துவதற்கு அவசியமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை கம்பனியானது பொதுவான நோக்க வகுதியின் கீழ் எழுந்திருந்த கட்டணங்கள் காரணமாக 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,365,600 மேலதிக தொகை ஏற்பட்டிருந்தது.	நாங்கள் கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் நாங்கள் இது தொடர்பில் BOC உடன் தொடர்பில் இருந்தன.	கம்பனியினுடைய கோட்டல் வளவிற்கு அர்பணிக்கப்பட்ட புறம்பான மின்சார மீட்டரை பொருத்துவதற்கு முகாமைத்துவம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது கோட்டலிற்கு குறிப்பிட்ட மின்சார நுகர்வை சரியாக அளவீடு செய்ய மற்றும் சரியான மின்சார பட்டியலிடல் என்பவற்றினை உறுதி செய்யும் போது பொதுவான நோக்க வகுதியின் கீழ் தேவையற்ற கட்டணங்களை தவிர்க்கப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i) IDS மென்பொருள் பொதி / கோட்டல் முகாமைத்துவ முறைமை IDS மென்பொருள் பொதியின் மீளாய்வில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.		
அ. கம்பனியானது 2006 இலிருந்து மென்பொருளை பயன்படுத்திய போதிலும் விற்பனையாளருக்கும் பயனாளருக்கும் இடையில் முறையான உடன்படிக்கை இருக்கவில்லை.	அ கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுவதுடன் தற்போது புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.	சகல மென்பொருள் கொள்வனவுகள், தரமுயர்த்தல்கள் மற்றும் பராமரிப்பு சேவைகளிற்கு மென்பொருள் விற்பனையாளருடன் முறையான அனுமதிக்கப்பட்ட உடன்படிக்கை கம்பனி
ஆ. கம்பனியானது சொல்லப்பட்ட மெனபொருளின் கொள்வனவு	ஆ. கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றோம்	

மற்றும் பராமரிப்பிற்கு 2010 மே 17 இல் IDS மென்பொருள் (பிரவேட்) லிமிட்டெட்டுடன உற்பத்தி சேவை உடன்படிக்கை திரும்பவும் கைச்சாத்திட்டிருந்தது. எவ்வாறாயினும், மூல உடன்படிக்கை கிடைத்திருக் காததுடன் நிழற்பட பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இ. கம்பனி தரிப்பிலிருந்து அனுமதிக்கப்பட்ட கடமைகள் 2010 மே 17 ஆந் திகதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்ப ட்டிருக்கவில்லை. சொல்லப்பட்ட உடன்படிக்கையின் கொடுப்பனவு நிபந்தனைப் பிரகாரம் உடன்படிக்கை 2011 மார்ச் 31 இல் நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனிக்கும் விற்பனையாளருக்கும் இடையில் முறையான சேவை உடன்படிக்கை இல்லாமல் 2013 மே 22 முதல் 2016 யூலை 01 வரையான காலத்திற்காக ரூபா 3,327,962 தொகை செலுத்தப்பட்டிருந்தது. .

ஈ. மூல முறைமை கம்பனிக்கும் முறைமை விற்பனையாளருக்கும் இடையில் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடாமல் 2016 இல் புதிய முறைமை (முறைமை 4.1 முதல் முறைமை 6.1 வரை) நாளது வரையாக்கப்பட்டிருந்தது. இதன்படி தகுதியான உடன்படிக்கை இல்லாமல் 201 யூலை 22 இலிருந்து 2023 யூன் 22 வரையான காலப்பகுதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட விலைப் பட்டியல் அடிப்படையில் ரூபா 8,546,250 தொகை செலுத்தப்பட்டிருந்தது. கொடுப்பனவு விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

கொடுப்பனவு திகதி	**தொகை (ரூபா)**
2016.07.22	228,000
2016.06.13	479,208
2018.02.27	1,376,041
2018.10.29	1,417,535

இ. கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றோம்

ஈ. கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றோம்

உ. IDS உடன்படிக்கை பிரகாரம் நாங்கள் வருடாந்த பராமரிப்பு கட்டணங்களை மாத்திரம் செலுத்துகின்றதுடன் ஏதாவது மூலதன கிரயமும் ஒருபோதும் செலுத்தப்படவில்லை. ஆகவே, நாங்கள் மொத்த வருடாந்த பராமரிப்பு கிரயம் சேர்ப்பட்டிருக்கையில் உண்மையான படத்தை வெளியிடுட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அறிவில்லாத ஊழியர்கள் மாறுப்போது அறிவு திறம்பட நடைபெறாமல் இருப்பது பயற்சியை முறையாக நடத்தாமல் இருப்பது போன்ற காரணங்களால் நாங்கள் முழுமையாக மற்றும் வினைத்திறனாக முறைமையை பயன்படுத்தியிருக்கவில்லை என உடன்படுகின்றோம். எவ்வாறாயினும், நாங்கள் இலங்கையில் பயன்படுத்தப் பட்டிருக்காத HR மற்றும் சம்பள முறையை தவிர அந்த சகல மாதிரிகளையும் தற்போது பயன்படுத்தப்படுகின்றன.

ஊ. சேவை வழங்குநர் தற்போது 2006 இல் வாங்கபபட்ட எங்களுடைய தற்போதைய IDS பகுதியை ஆதரவளிப்பதை நிறுத்தியிருந்தமையால் கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றொம். நாங்கள் பகுதியை ஆதரவளிப்பு நீண்ட காலத்திற்கு முன்னர் நிறுத்தி விட்டதாகவும் இந்த முறைமையை பற்றிய அறிவுடையவர் எவரும் அவர்களுடைய கம்பனியில் இல்லை எனவும் விற்பனையார் தெரிவித்திருந்தார். ஆதலால், நாங்கள் இப்போது அண்மைக் காலப் பதிப்பை வங்கியுள்ளோம் எதிர்காலத்தில் இந்த குறைபாடு இருக்காது.

கைச்சாத்திடப்பட்டு பேணுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது சகல கொடுப்பனவுகளும் நோக்கெல்லை, நிபந்தனை மற்றும் அவசியத்தை மீளாய்வு செய்த பின்னர் தகுதியுடைய உடன்படிக்கைகிற்கு எதிராக மாத்திரம் செய்யப்பட வேண்டும். கம்பனியானது போட்டி கேள்வி நடைமுறை உள்ளடங்கலாக தாபிக்கப்பட்ட கொள்வனவு நடைமுறைகளை கடுமையான பின்பற்றப்பட வேண்டும். பிரதான முறைமைகளிற்காக விசேடமாக பிரயோகிக்ககூடிய தரமுயர்தல்கள் அல்லது மீளமைப்புகள். முறைமையின் சகல செயற்பாட்டு மாதிரிகளையும் முழுமையாக பயன்படுத்துவதற்கு கட்டாயமாக முயற்சிகள் செய்யப்பட வேண்டும். மேலும், தேவையற்ற செலவுகளிலிருந்து பாதுகாத்து ஒட்டு மொத்த முறைமை முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டை தரமுயர்த்தி அதன் மூலம் முறைமை தரமுயர்த்தல்கள் மற்றும் மாற்றங்கள் சரியான நேரத்தில் பூர்த்தியாக்குவதை உறுதி செய்வதற்கு வலுவான திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு நடைமுறைகைளை செயற்படுத்தப்பட வேண்டும்.

2019.10.08	1,205,377
2020.08.04	1,063,151
2021.06.29	354,380
2022.05.23	1,417,535
2023.05.22	472,512
2023.06.22	472,512
மொத்தம்	**8,546,251**

2013 ஒக்தோபர் 23 இல் மேற்குறிப்பிட்ட தரமுயர்த்தல் தொடர்பில் வற்பனையாளர் பரிந்துரகளை வழங்கியிருந்த போதிலும் நோக்கெல்லை, நிபந்தனைகள் மற்றும் கம்பனியின் அவசியத் தன்மைக்கான நிபந்தனைகள் ஏ்பவற்றினை மீளாய்வு செய்யாமல் பரிந்துரை வழ்கப்பட்டதிலிருந்து 03 ஆண்டுகளின் பின்னர் 2016 ஆண்டில் தரமுயர்த்தல் செய்யப்பட்டிருந்தது.

அ. கம்பனி அவர்களுடைய தகவல் முறைமைக்காக ரூபா செலவழித்திருந்த போதிலும் (மேற்குறிப்பிட்ட (இ), மற்றும் (ஈ)) முறைமைக்குள் பின்வரும் வசதிகள்/ விருத்தி செய்யப்பட்ட / கொள்வனவு செய்யப்பட்ட செயற்பாடுகள் கணக்காய்வு அறிக்கை திகதி வரை அவர்களுடைய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. ஆகவே, அத்தகைய வசதிகளின் கொள்வனவு தொர்பான ஏற்பட்ட கிரயம் கம்பனிக்கு பயனற்றதாக இருந்ததென அவதானிக்கப்பட்டது. வசதிகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பிரிவு	**பயன்படுத்தப்படாத வசதிகள்**
பொருள் முகாமைத்துவம்	கொள்வனவு வேண்டுகைகள்
பராமரிப்பு முகாமைத்துவம்	IDS ஆல் வழங்கப்பட்ட சகல வசதிகளும்
HR மற்றும் சம்பளப்பட்டியல்	IDS ஆல் வழங்கப்பட்ட சகல வசதிகளும்

எ. எந்தவொரு கொள்வனவு நடைமுறையும் நடாத்தப்படாமைக்கான காரணங்கள் பின்வருமாறுள்ளன. நாங்கள் புதிய மென்பொருளை தேடாமல் அதே பதிபபை தரமுயர்த்துவதற்கு தீர்மானித்திருந்தோம். ஆகவே, நாங்கள் அதே வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்திருந்தோம். மற்றும் போட்டி கேள்வி அடிப்படையில் புதிய பதிப்பை பெறுவதற்கு இருந்திருக்குமாயின் நாங்கள் REPs தயாரிப்பதற்கு அல்லது ஏனைய தொழில்நுட்ப விபரங்களிற்காக பாரத்தலிற்கு நிபுணத்துவ உத்தியோகத்தர்களை கொண்டிருக்கவில்லை. உங்களுடைய உத்தியோகத்தர்கள் தற்போதைய முறைமையை சரியாக தெரிந்திருந்தனர். மேலும், நாங்கள் புதிதாக வாங்க நேர்ந்தால் உத்தியோகத்தர்களிற்கு பயிற்சியளிப்பது ஒரு கடினமான வேலையாக இருக்கும். நாளாந்த வேலைகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் குறைவாக இருப்பதால் தொழிலாளர் விதிமுறைகளின் பிரகாரம் அவர்களிற்கு விடுமுறை வழங்கும் அதேவேளை பயிற்சிக்காக உத்தியோகத்தர்களை திருப்பி விடுவது கனவாக இருந்திருக்கும். மிக முக்கியமாக நாங்கள் தற்போதைய பழைய முறைமைக்கு மிகுந்த சிமத்துடன் ஆதரவை பெற்றுள்ளோம். மேலும் இந்த முறைமை ஏற்கனவே காலாவதியானதால் தற்போதைய விற்பனையாளருடன் நீண்டகால உறவுக்காக உருவாக்கப்பட்ட நல்லெண்ணமாகும். நாங்கள் புதிய முறைமைக்கு மாறினால் தற்போதைய விற்பனையாளர் குறைத்தலை ஆதரிக்கமாட்டார். ஒப்பந்த இடைநிறுத்தல் முடிவுறுத்திய நாளான 2024

அ. விற்பளையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட 2023 ஒக்தோபர் 23 ஆந் திகதிய பரிந்துரைகளின் பிரகாரம் புதிய தரமுயர்த்தலிற்கு கம்பனியின் உத்தியொகத்தர்களை பயிற்சி அளிக்கப்பட வெண்டும். எவ்வாறாயினும் செலுத்தப்பட்ட மொத்த செலவில் தகுதியுடையவற்றினை மெய்மையாய்வு செய்வதற்கு தொடர்பான பயிற்சி பதிவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க்படவில்லை

ஆ. 2024 சனவரி 31 ஆந் திகதிய 03/680/2024 ஆம் இலக்க சபைத் தாள் தற்போதைய பதிப்பு காலாவதியானதால் முறைமையின் பதிப்பை FX-Cloud/Mobility Solution இற்கு மாற்றுவதற்கு அனுமதியளித்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- புதிய பதிப்பிற்கு மாற்றுவதற்கு தகராறு இருப்பினும் எந்தவொரு கொள்வனவு நடைமுறையை பின்பற்றாமல் இருக்கின்ற பதிப்பின் வழங்குநருக்கு செயற்திட்டம் கையளிக்கப்பட்டது.

- தற்போதுள்ள முறைமையை FX-Cloud/Mobility Solution இற்கு மாறறுவதற்கு கம்பனியானது IDS நெக்ஸ் பிசினஸ் சொலுசன் பிரைவேட் லிமிட்டெட்டிற்கு ரூபா 1,360,800 முழு செயற்திட்ட கிரய தொகையும் முழுமையாக செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும் புதிய முறைமை கணக்காய்வு அறிக்கை திகதி வரை பொருத்தப்பட்டிருக்கவில்லை.

மார்ச் 31 இல் உள்ளவாறு சேவை முடிவுறுத்துவோர் அத்தகைய சூழ்நிலையில் புதிய முறைமையை செயற்படுத்தம் வரை இடைக்காலத்தில் கோட்டல். செயற்படுத்துவதற்கு எந்தவொரு முறைமையும் இருக்காது.

(ii) CCTV முறைமை

அ. CCTV முறைமை (DVR மற்றும் IP) கம்பனியின் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பை பாதிக்க

கருத்துரைகள் பெறப்படவில்லை.

அ. கம்பனியானது தற்போதைய கண்காணிக்கப்படாத

	கூடிய பின்வரும் இடங்களில் மேவப்பட்டிருக்கவில்லை. • பிரதான களஞ்சியத்தின் உட்பகுதி • சலவை வரவேற்பறையின் உட்பகுதி • சலவை அறையின் உட்பகுதி • சலவை அறையிற்கு அருகிலுள்ள பகுதி • காஸ்சிய விருத்தினர் மண்டபத்தின் உட்பகுதி • தஸலலா விருந்தனர் மண்டப உட்பகுதி ஆ DVR CCTV முறைமையின் கட்டுப்பாடு தொடர்பில் நிர்வாக கணக்கிற்கான பாஸ்வேட் கம்பனி IT பிரிவில் வேலை செய்த மற்றும் பல ஆண்டுகளாக உத்தியோகத்தரிடம் உள்ளது. இதன் காரணமாக தற்போதைய IT பிரிவு முறைமையின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு இயலாதிருந்ததுடன் தற்போது பராமரிப்பு பழுதடைந்தமைக்காக CCTV முறைமைக்கான சேவை வழங்குநர் எவரும் இருக்கவில்லை.		சகல முக்கியமான மற்றும் அதிக ஆபத்த பகுதிகளை உள்ளடக்கிய தற்போதைய CCTV கண்காணிப்பு முறைமையை விரிவாக்கப்பட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கம்பனியானது தற்போது கண்காணிக்கப்படாத சகல முக்கியமான மற்றும் அதிக ஆபத்துள்ள பகுதிகளை உள்ளடக்கிய தற்பொதைய ஊஊவுஏ கண்காணிப்பு முறைமை விரைவுபடுத்தப்பட வேண்டுமென பரிந்துரைத்துள்ளது. ஆ. கம்பனியானது உற்பத்தியாளர் ஊடாக நிர்வாக சான்றுகளை மீளமைப்பதன் மூலமோ அல்லது தகுதிவாய்ந்த CCTV முறைமைக்கான தொழில்நுட்ப அறிவுடைய நிபுணத்துவர் உதவியை பெறுவதன் மூலமோ CCTV முறைமைக்கான நிர்வாக நுழைவு திரும்பம் பெறுவதற்கான செயற்பாட்டை உடனடியாக தெடங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது அதேபோல ஓய்வுபெற்ற அல்லது இராஜினா செய்தலின் பொது சகல செயற்பாடுகள், ஆவணங்கள் மற்றும் அல்லது கடித தொடர்பு போன்றன திரும்ப பெறப்படுவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(iii)	வெடிப்புக்களை மீளமைப்பதற்காக கம்பனியால் (கட்லறி விடயங்கள்) ஏற்பாடுகள் அதன் பயன்பாட்டிற்காக புதிய கட்லறி விடயங்கள் கொள்வனவு	கருத்துரைகள் பெறப்படவில்லை.	செய்யப்பட்ட ஏற்பாடுகளில் கட்லறி விடயங்களை மீளமைக்க/ நிரப்புவதற்கு கடுமையாக பின்பற்றப்பட

செய்யாமல் ஊழியர்களிற்கு இடையல் பகிரப்பட்டது. மேலும் கட்டறி விடயங்களின் மெய்மையாய்விற்காக முறையான பொறிமுறை இருக்காததுடன் ஒவ்வொரு ஆண்டிலும் செய்யப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து வெடிப்பகள் நிரப்படுகின்றன. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

ஆண்டு	2020	2019
Allocation for Breakages	1,084,533	2,328,666
உபகரண விடயம் கொள்வனவு	-	-
ஊழியரிற்கு இடையில் பகிரப்பட்டது	965,235	2,018,666
பகிரப்பட்ட திகதி	08.04.2021	30.07.2020

வேண்டும்.

3.3 கொள்வனவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
3.3.1 கோட்டலின் மென்மையான புதுப்பித்தல் 2020 செப்தெம்பர் முதல் 2021 மார்ச் வரையான காலத்தின் பொது அரச பொறியியல் கூட்டுத்தாபனம் கோட்டல் கட்டிடத்தின் திருத்த வேலைகளை மேற்கொண்டிருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன. (i) இந்த செயற்திட்டம் தொடங்குவதற்கு 2020 ஒக்தோபர் 10 இல் அமைச்சரவையால் அரச பொறியியல் கூட்டுத்தானத்திற்கு பகுதியளவு வழங்கல் கடிதம் வழங்கப்பட்டிருந்த போதிலும் திருத்த வேலைகளிற்காக அரச பொறியியல் கூட்டுத்தானத்திற்கு கையளித்த சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. (ii) கட்டிடத்தின் திருத்த வேலைகள் 2020 செப்தெம்பர் 10 இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும் திருத்த வேலைகள் தொடங்கியதிலிருந்து ஒரு	• கணக்காய்வு அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம் • SEC ஆல் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல் கொடுப்பனவு GOH இன் சபை அனுமதிக் கப்பட்டிருக்காமையால் இறுதியாக்காமல் இன்னமும் நிலுவையில் உள்ளது. • இது தொடர்பில் பொது திறைசேரியில் கலந்துரையால் நடாத்தப்பட்டதுடன் பொது திறைசேரியின் உயர்மட்ட உத்தியோகத்தர்களின் ஈடுபாட்டால் GOH சபை உறுப்பினர்களுடன் பொது திறைசெரியால் காலந்துரையாடுவதற்கு ஒழுங்கு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. ஆனால், இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. • GOH நியோன் பலகை மூலம் SEC ஐ முறையாக திருத்தப் பட்டிருக்கவில்லை. நாங்கள் உள்நாட்டு கம்பனி மூலம் அதனை திருத்தம்	எதிர்காலத்தில் செயற் திட்டங்களில் இது போன்ற சிக்கல்களை மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்கு செயற்திட்ட நிர்வாகம், ஒப்பந்த முகாமைத்துவம், மற்றும் நிதி மேற்பார்வை ஆகியவற்றிற்காக கடுமையான கடுமையான நடைமுறைகளை கம்பனி தாபிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட ஆளுகைக்கான நடைமுறைகளை கடுமையாக கம்பனி தாபிக்கப்பட்டு செயற்படுத்த பரிந்துரைக்கப்பட்டள்ளது.

ஆண்டும் ஏழு மாதங்களும் கடந்த பின்னர் 2022 மே 04 இல் கம்பனிக்கும் அரச பொறியியல் கூட்டுத்தானத்திற்கும் இடையிலான ஒப்பந்தம் கைசாத்திடபபட்டது என அவதானிக்கப்பட்டது. இதன்படி, தொடர்பில் கம்பனிக்கும் அரச பொறியியல் கூட்டுத்தானத்திற்கும் இடையில முன்னரே முறையான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடாமல் கட்டடி திருத்த வேலைகள் செய்யப்பட்டிருந்தது. இந்த வேலைகளிற்காக முறையான உடன்படிக்கை கைச்சாத்திடாமல் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 174,364,377 ஐ கம்பனி செலுத்தியிருந்தது.

(iii) கம்பனிக்கும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும் இடையிலான உடன்படிக்கை பணிப்பாளர்களில் ஒருவர் மற்றும் கம்பனியின் பிரதம கணக்காளரால் கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பிரதம கணக்காளர் சபையிடமிருந்து அதிகாரங்களை கையளிக்காமையால் கம்பனியின் பிரதான கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான ஒப்பந்தங்கள் கையொப்பம் இடுவதற்கு அதிகாரங்களை கொண்டிருக்கவில்லை.

(iv) செயற்திட்டமானது அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் 2020 செப்தெம்பரில் தொடங்கப் பட்டிருந்ததுடன் வேலைகள் 2021 மார்ச் 18 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு நேரடியாக செயற்திட்டத்தை வழங்குவதற்கு 2021 திசெம்பர் 21 இல் அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டது. இதன்படி அமைச்சரவை தீர்மானம் மூலம் முறையான வழங்குவதற்கு முன்னர் 1 ஆண்டும் மூன்று மாதங்களும் அல்லது வேலைகள் பூர்த்தியான 9 மாதங்கள் பின்னர், அரச பொறியியல் கூட்டுத்தாபனம் அதன் வேலைகள் தொடங்கியிருநத்து

செய்வதற்கு மயற்சி எடுத்திருந்தோம். நியான் பலகைகளில் புகழ்பெற்ற நிறுவனங்கள் மிகவும் அதிகமாக விலை குறிப்பிட்டதாலும் சில நிறுவனங்கள் நியான் பலகையை பாவிப்பது மிகவும் கடினமாக இருப்பதால் குறைந்தது விலை மனுவை கொடுக்க மிளாய்வு செய்வதற்கு வருகை தரவில்லை என்பதால் மிகவும் கடியமாக உள்ளது. ஆகவே, ஒரு நிறுவனத்தின் கீழ் முன்னர் அந்த பலகையை பழுதுபார்க்கம் வேலையில் ஈடுபட்டிருந்த ஒரு சிறிய ஒப்பந்தகாரரை நாங்கள் கண்டு பிடித்தோம் தேவையான பகதிகளை வாங்குவதற்கு முற்பணம் கொடுத்திருந்தோம் பின்னர் அவார் போதைக்கு அடிமையானவர் / பொலிசாரால் தேடப்படும் குற்றவாளி என அறியப்பட்டது. எனவே, அவர் ஒரு தொழிலாளியாக இருந்தாலும் தற்போது வேண்டுமென்றே மோசடி செய்பவர் போல தோன்றி எங்களிடமிருந்து தப்பித்திருந்தார் எனவெ, நாங்கள் அர் மீதி பொலீசில் முறைப்பாடு செய்துள்ளதுடன் இந்த பணம் எங்களிற்கு இழப்பாக காணப்பட்டது. .

(v) 2020 யூலை 01 ஆந் திகதிய MFE/ERD/38/CM/2020/140 ஆம் இலக்க நிதி அமைச்சினுடைய கடிதத்தின் பிரகாரம் அமைச்சரவை 2020 பெப்ரவரி 26 ஆந் திகதிய 20/0587/204/050 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் அனுமதிக்கப்பட்டது மற்றும் சிலோன் லங்கா கோட்டல் மற்றும் ஸ்பா (தன்யார்) லிமிட்டட், (கிராண்ட் கையர் கோட்டல்) கோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா பீஎல்சீ (கில்டன்) மற்றும் கிரான் ஒறியன்டல் கோட்டல் ஆகியவற்றின் தாய் கம்பனியான கேன் வில் பிறைவேட் லிமிட்டெட்டை ஒழுங்கிணைப்பதன் மூலம் ஒரு கோல்டிங் கம்பனியை உருவாக்க திறைசேரி செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது.

- அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் செலவண்டிய இன்வெஸ்மன்ட் லிமிட்டட்டுடன் (SIL) கோட்டலை ஒருங்கிணைக்க இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபையின் அனுமதி 2020 ஆகஸ்ட் 13 இல் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், அமைச்சரவை செயற்திட்டத்திற்காக பணிப்பாளர் மற்றும் SIL தலைவர் என்போரை நியமித்திருந்ததுடன் ஒருங்கிணைப்பு வேலை பூர்த்தியாகும் வரை மேலும் புதுப்பித்தலை செய்வதற்கு இலங்கை வங்கியின் தலைவரிற்கும் கம்பனிற்கும் அறிவுறுத்தியிருந்தது.
- கம்பனிக்கு முகாமைமாற்றத்தை செயற்பாட்டை எளிதாக்குவதற்கு SIL இற்கு அனுமதீ வழங்குவதற்கும் கம்பனிக்கு ரூபா 250 மில்லியன் நீண்ட கால கடன் மூலம் செயற்திட்டத்திற்கு நிதியளிப்பதற்கும் இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபை அனுமதி 2020 செப்தெம்பர் 25 இல் வழங்கியிருந்தது.
- இதன் விளைவால், செலவெண்டிய இன்வெஸ்மன்ட்

லிமிட்டட் (SIL), அரச பொறியியல் கூட்டுத்தானம் மற்றும் கம்பனிக்கும் இடையில் இந்த செயற்திட்டத்திற்காக 2022 மே 04 இல் மூன்று பகுதிகள் கொண்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட ஒருங்கிணைப்பு கணக்காய்வு தீகதி வரையும் எடுக்கப் பட்டிருகக்காததுடன் SIL 2023 மார்ச் மாதத்தில் சுயோட்சையாக கணக்கொழிப்பை பிரயோகித்திருந்தது.

(vi) செயற்திட்டமானது "செழிப்பு மற்றும் சிறப்பு பார்வை" இன் கீழ் அரசாங்க தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு இணங்க நகர அழகுபடுத்தல் செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக தேவையான உட்கட்டமைப்பு உருவாக்கும் நோக்கில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு (UDA) ஒப்படைக்கப்பட்டது. அந்த திட்டத்தின் பிரகாரம் கொழும்பு நகரம் "21 ஆம் நூற்றாண்டில் புதிய கொாழும்பு" ஆக முன்மொழியப்பட்டுள்ளது. இதில் கம்பனியை சுற்றறியுள்ள பகுதியை சுற்றுலாத்துறையை கவரும் வகையில் பாரம்பரிய நகரமாக அபிவிருத்தி செய்வது உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் விளைவால் 2022 பெப்வரி 02 இல் UDA இற்கும் SIL இற்கும் இடையில் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சத்திடப்பட்டது. எவ்வாறாயினும், இந்த செயற்திட்ட வேலைகள் பூர்த்தியான பின்னர் 10 மாதங்கள் கடந்து MOU கைச்சாத்திடப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(vii) இந்த செயற்திட்டத்தின் செயற்திட்ட கையளிப்புச் சான்றிதழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் கம்பனிக்கு வழங்கப்பட்ட போதிலும் கம்பனியானது வெற்றிகரமான பூர்த்தியாக்கலில் அவர்களுடைய கருத்தினை வெளிப்படுத்தி

சான்றிதழை கையொப்ப மிட்டிருக்கவில்லை. செயற்திட்ட கையளிப்ப சான்றிதழின் பிரகாரம் வேலைகள் 2021 மார்ச் 18 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதி 365 நாட்களாக இருந்தது. ஆகவே, செயற்திட்ட தரங்களின் மீதான அறிக்கை பௌதீக ரீதியாக பரிசோதிக்கப்பட வேண்டியதுடன் பிடிகாசு விடுவித்தல் 2022 மார்ச் 18 அல்லது அதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிப்தற்கு செயற்திட்ட ஆலோசனையாளரிடமிருந்து அத்தகைய அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(viii) தொழில் நுட்ப அறிவுடைய உத்தியோகத்தர் ஒருவரை செயற்திட்ட மேற்பார்வைக்கு கம்பனி பக்கத்திலிருந்து நியமிக்கப்பட வேண்டிய போதிலும் (ஆலோசனையாளர் மற்றும ஒப்பந்தகாரர்), அத்தகைய உத்தியோகத்தர் இங்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் கம்பனியானது வேலைகள் வினைத்திறனாக மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு வெளித்தரப்பினருடைய வேலையை கணக்காணிக்க முடியாதிருந்தது.

(ix) 2023 யூன் 07 இல் கம்பனியில் வேலை செய்கின்ற பிரதம பொறியியலாளர் ஒப்பந்தகாரருக்கான குறைபாட்டு கவனிப்பு (SEC) காலப் பகுதி பற்றி இந்த குறைபாடுகள் பற்றி இலங்கை வங்கியின் திணைக்கள வளவிற்கு அறவித்திருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வு திகதியில் உளவாறு வங்கியால் எவ்வித பொறுப்புக்களும் வழங்கப்பட்டடிருக்கவில்லை. பிரதம பொறியியலாளரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

- கோட்டல் நியான் அறிவித்தல்

வேலை செய்யவில்லை. கம்பனி நுழைவாயில் இடத்தை முறைப்படி பூர்த்தியாக்க வேண்டியிருந்தமை அழகாக முடிக்க வேண்டி இருந்தது

- கம்பனி நுழைவாயிலின் இரண்டு கதவுகள் முறையாக மூடியிருக்வில்லை. கீரல்கள் சரியாக முடிக்காததால் பாதுகாப்பு பிரச்சனை ஏற்படாலாம்.
- கம்பனி நுழைவாயில் பகுதி பக்கவாக்க மூடல்கள் வேலை சரியாக முடிக்கப்படவில்லை. தரை ஓடுகளை மூடுவதற்கு பக்கவாக்க மூடல்களைச் சுற்றி உலோக சட்டம் இருக்க வேண்டும். பக்கவாக மூடியகில் உளள சகல ஓடுகளும் சேதமடைந்திருந்தது.
- கதவுச் சட்டச் சுவர்கள் சுற்றியுள்ள லிப்ட் தரையிறங்கும் பகுதி சரியாக முடிக்கப்படவில்லை. மெல்லிய பலகைகள் சேதமடைந்துள்ளன. அவற்றை சரி செய்ய முடியாதமை விருந்தினர்களிற்கு தெரியும்.
- முகப்பு பகுதியில் 02 பார் இரும்புகள் வடிகால் வழியில் தேசதமடைந்து நீர் கசிகின்றது.

(x) கணக்காய்வு திகதியில் உள்ளவாறு ரூபா 174,364,377 தொகை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப் பட்டிருந்தததுடன் ரூபா 43,537,132 செலுத்த சேலுத்த வேண்டியவையாக இருந்தது. (ரூபா 17,694,990 ஆன VAT உள்ளடங்க)

(xi) 2020 ஒக்தோபர் 10 இல் வழங்கப்பட்ட பகுதி ரீதியான கடிதத்தின் பிரகாரம் செயற்திட்டம் 2020 திசெம்பர் 24 இல் பூர்த்தியாக்கப்படட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் 2021மார்ச் 18 இல் பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. கால நீடிப்பு வழங்கப்பட்டதென வாய்மொழி மூலம் குறிப்பிடப்பட்ட போதிலும் கால நீடிப்பை நிரூபிப்பதற்கு

கணக்காய்விற்கு எவ்வித சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	2021 இல் வழங்கப்பட்ட அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளின் செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் அறுபது (60) நாட்களிற்குள் கணக்குகள் கையளிக்கப்பட வேண்டும்.	கவனத்திற் கொள்ளப்பட்டது. நாங்கள் சகல நிதி நடவடிக்கைகளையும் மீளாய்வதற்கு தகுதியுடைய நபரை நியமிப்பதுடன் நிதி பிரிவு மற்றும் அவன் / அவள் நிதிக்கூற்று தயாரிப்பதற்காக ஈடுபடுத்தப்படுவர்.	ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்து பின்னர் 60 நாட்களிற்குள் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ள்ளது.